முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1233

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

13.02.2023, திங்கட்கிழமை

1. தர்மவேலி கொண்ட அரங்கனே
   தவபல மிக்க தேசிகனே
   பெருமைமிக்க உன்தொண்டர் படைகொண்டுதான்
   பேருலகம் மாற்றம் நிகழுமப்பா
2. அப்பனே அரங்கனே என்றுவாழ்த்தி
   ஆறுமுகன்யான் ஞானஅறிவுரை ஆசிதன்னை
   (சுபகிருது வருடம் மாசி மாதம் முதல் நாள், 13.02.2023 திங்கட்கிழமை)
   ஒப்புகொண்டு அரங்கனுக்கு தொடர்ந்துரைப்பேன்
   ஓங்காரக்குடில் கொண்டுதான் இந்தஉலகத்தில்மாற்றம்
3. மாற்றத்தை ஆறுமுகன் யான் நடத்துவேன் மக்களெல்லாம் அரங்கன் வழிக்குவர
   ஏற்றம் கண்டு இந்த பேருலகில் இடர்களில்லாத ஞானவாழ்வை கண்டு சிறப்பர்
   சிறப்புதரும் அரங்கன் கலியின் சிறந்தஞானி
   சித்திமிகு வரங்கள் தரும் அரும்தவசி அரங்கனாகும்
4. ஐயமற உலகோர் ஏற்றுவந்தால்
   அற்புதத்தை வாழும் காலமேகண்டு
   கண்டுமே அரங்கன்வழி ஞானிகளாகி
   கலியுகத்தில் பிறவாபேறு காணக்கூடும்
5. காணவே அன்னதனால் கலியுகத்தார்
   சுத்த சன்மார்க்க நெறி ஏற்று
   ஞானவான் அரங்கன் உண்மை நெறியை
   நம்பிக்கை வைத்து தொடர்ந்து சரணாகதி கொண்டு
6. கொண்டுமே அரங்கன் மேல் அளவிலா பற்றுவைத்து
   அடிபணிந்து திருவடி தீட்சை ஏற்று
   வரமாக முழுமதிதோறும் தொடர்ந்து வர
   வையகத்தில் ஞானிகளாக நிலைஉயர்ந்து சிறப்பு காண்பர்
   ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–